தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் வசித்து வந்த நுங்கம்பாக்கம், கல்லூரி பாதைக்கு "ஜெய்சங்கர் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், இயற்கை வளங்கள் துறையின் சார்பில் சென்னை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 40,528 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 23.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ். ரகுபதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரூ.39.33 கோடியில் 145 நூலகக் கட்டிடங்கள் திறப்பு! ரூ.4.01 கோடியில் மாவட்ட மைய நூலகக் கட்டட அடிக்கல்!

தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகத்தின் 26 புதிய நூல்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, செப். 27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட்டார். மேலும், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான 146 நூலகக் கட்டடங்களை பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, கள்ளக்குறிச்சி நகரில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட மைய நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

26 புதிய நூல்களை வெளியிடுதல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் நாட்டுடைமை நூல்கள், நூற்றாண்டு காணும் ஆளுமைகள், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், செவ்வியல் நூல்கள், அரிய நூல்கள் வெளியீடு ஆகிய திட்டங்களின் கீழ் நூல்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், அரிய நூல்கள் பிரிவில் - "தமிழ்நாட்டில் காந்தி" எனும் நூலும், நாட்டுடைமை நூல்கள் பிரிவில் "தமிழர் தலைவர்" (தந்தை பெரியார்), தமிழில் சிறுபத்திரிகைகள், பாரதி நினைவுகள், பாரதியார் சரித்திரம், என் குருநாதர் பாரதியார், நான் கண்ட பெரியவர்கள் ஆகிய நூல்களும், மூத்த வரலாற்று அறிஞர்களின் தமிழ்நாட்டு வரலாறு அரிய நூல்கள் பிரிவில் - பல்லவர் வரலாறு மற்றும் மொகஞ்சதரோ அல்லது சிந்துச் சமவெளி நாகரீகம் ஆகிய நூல்களும், நூற்றாண்டு காணும் ஆளுமைகள் பிரிவில் டி.கே. சீனிவாசன் படைப்புலகம் என்ற நூலும், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் குறட்டை மற்றும் தூக்கத்தில் மூச்சுத்தடை - ஒரு கண்ணோட்டம், மருத்துவ ஆராய்ச்சி முறைகளும் ஆய்வறிக்கை எழுத எளிய வழிமுறையும், Robert Frost Poems in Tamil, Ramayyan Ammanai (A Tamil Historical ballad) ஆகிய நூல்களும், இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் ஆதியும் நடேசன் தாத்தாவும், இரட்டை முனை வாள், எழிலனின் ஆசை, சாதனை, பாட்டிக்கு என்ன பரிசு தர வேண்டும், பூத்த சிறகுகள், அவள் ஒரு தேவதை, கண்டுபிடி கண்டுபிடி, காதல், முகிலைத் தேடி ஆகிய நூல்களும், செவ்வியல் நூல்கள் பிரிவில் பரிபாடல் என்ற நூலும், என மொத்தம் 26 புதிய நூல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று வெளியிட்டார்.

பொது நூலக இயக்ககம்

தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்கள் மாநிலம் முழுவதும் கல்வி, எழுத்தறிவு மற்றும் அறிவுப் பரவலை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, பெரும் எண்ணிக்கையிலான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் மின் வளங்களைக் கொண்டு அனைத்து வயதினரும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அணுகக்கூடிய மையங்களாக விளங்குகின்றன. இந்த நூலகங்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களில் கல்வி மற்றும் தொழில்முறை திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன. சென்னை-கன்னிமாரா பொது நூலகம், சென்னை-அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை - கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்கள், நடமாடும் நூலகங்கள், பகுதிநேர நூலகங்கள், என 4,682 நூலகங்களை பொது நூலக இயக்குநரகம் நிர்வகிக்கிறது.

திறந்து வைக்கப்பட்ட புதிய நூலகக் கட்டடங்களின் விவரங்கள்

தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு 2023-2024-ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டம் பகுதி VII இன் கீழ், 821 பொது நூலகங்களுக்கு கூடுதல் கட்டடம் கட்டுதல் / தேவையான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், கணினி தொடர்புடைய சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு சிறப்பு நிதியுதவியாக 213 கோடியே 46 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில் ஒரு நூலகக் கட்டடம் 500 சதுர அடி பரப்பளவில் 821 பொது நூலக ங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் வழியாக புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

தற்பொழுது ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 90 நூலகங்களும், பேரூராட்சிகள் இயக்ககம் மூலம் 32 நூலகங்களும், நகராட்சி நிர்வாகத் துறை (நகராட்சி) மூலம் 20 நூலகங்களும், என அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 31 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவிலான நூலகக் கட்டடங்கள், 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள், 2 கோடியே 05 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கணினி தொடர்புடைய சாதனங்கள், என மொத்தம் 36 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 142 நூலகக் கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1069 சதுரடியில் முழுநேர கிளை நூலகம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம்-2ல் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1590 சதுரடியில் முழுநேர கிளை நூலகம், ஆலாம்பாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1484 சதுரடியில் கிளை நூலகம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் 91 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் முதல்தளத்துடன் 1883 சதுரடியில் கட்டப்பட்டுள்ள முழுநேர கிளை நூலகம்; என மொத்தம் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 146 நூலகக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட மைய நூலகத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

கள்ளக்குறிச்சி நகரில் மாவட்ட மைய நூலகம் நான்கு தளங்களுடன் 14,369 சதுரடியில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பிசந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி ச. ஜெயந்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் (பொ) மருத்துவர் மா.ஆர்த்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர்-செயலர் முனைவர் சி. உஷாராணி, பொது நூலக இணை இயக்குநர் ச.இளங்கோசந்திரகுமார் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உதவி இயக்குநர் முனைவர் ப.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணைவேந்தருமான மா.சுப்பிரமணியன் நேற்று (26.09.2025) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக கூட்டரங்கில் பல்கலைக்கழக ஆராய்ச்சி நாளை முன்னிட்டு மருத்துவ ஆசிரியர்கள், முதுநிலை மற்றும் இளநிலை மருத்துவ மாணவர்களுக்கு சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். இதில் அதிகாரிகள், மாணவர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், நாடக நடிகர், தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர், அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த எஸ்.வி. வெங்கடராமன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் 5-வது குறுக்கு தெருவிற்கு "எஸ்.வி. வெங்கடராமன் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், எஸ்.வி. சேகர் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

"உடன்பிறப்பே வா"

புதுச்சேரி மற்றும் புதுச்சேரி- காரைக்கால் மாநில தி.மு.கழக உறுப்பினர் சேர்க்கை!

பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், அதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க. கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் 'மண்-மொழி-மானம்' காக்க, கழகத்தின் சார்பில் **"உடன்பிறப்பே வா"** பரப்புரை முன்னெடுக்கப்படும்.

புதுச்சேரியின் 30 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களைச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30% வாக்காளர்களைக் கழக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்.

இப்பணியை ஒருங்கிணைத்துச் செயலாற்ற, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் **எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**, அவர்கள் தலைமைக் கழகத்தால் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

புதுச்சேரி மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநிலக் கழகத்தின் மாநில - தொகுதி - வட்ட - ஊர்க்கிளை, உட்கிளை கழகச் செயலாளர்கள் என அனைவரும் உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தில் முழு மூச்சோடு இணைந்து பணியாற்றி, மாநிலத்தின் 30% வாக்காளர்களைக் கழக உறுப்பினராக்கிட வேண்டும் என்ற இலக்கை அடைந்திட வேண்டும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள் : 26.09.2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கூ.பீ.ஜெயின் எம்.சி. தலைமை!

வில்லிவாக்கம் மேற்குப் பகுதி சார்பில் "தி.மு.க.முப்பெரும் விழா" புகழரங்கம்!

பீட்டர் அல்போன்ஸ் அ.அருள்மொழி ம.மோகநிதி புகழுரை! மேயர் பிரியா ராஜன் தயாநிதிமாறன் எம்.பி அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, செப். 27 -

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட முன்னேற்ற கழகத்தின் 'முன்னேற்ற பாதையில் முப்பெரும் விழா' தி.மு.க. முப்பெரும் விழா தொடர் - 6 'மானமும் அறிவும் வளர்ப்போம்! வரலாறு புதிதாய் படைப்போம்!' எனும் தலைப்பில் இன்று (27.09.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, வில்லிவாக்கம், சிவன் கோயில் வடக்கு மாட வீதி, பேருந்து நிலையம் அருகில் புகழரங்க பொதுக்கூட்டம் நடைபெறுகின்றது.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக் குழுத் தலைவருமான கூ.பீ. ஜெயின் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி., சுதா தீனதயாளன் எம்.சி., வானவில் விஜய், லதா வாசு எம்.சி., ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஜ.சி.எப்.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு, ஆர்.கோபாலகிருஷ்ணன், சிட்கோ பி.சுரேஷ்பாபு, கோ.மணி வேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், க.மணிமாறன், எஸ்.கே.பி.தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரையற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அகில இந்திய காங்கிரஸ் பேரியக்க மூத்த தலைவர் ஆசிரியர் பீட்டர் அல்போன்ஸ், திராவிடக் கழக பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் ம.மோகநிதி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இதில் மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம்,

கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி பாஸ்கர், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சொ.வேலு எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஜ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எஸ்.பன்னீர் செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், வி.இரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி, ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், துரை கண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ண மூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி மற்றும் கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (BLA-2), பாக உறுபினர்கள் (BLC), பாக இளைஞர் அணி ஒருங்கினைபளர்கள் (BYO) அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

அண்ணா நகர் 100 (அ) வட்டத்தில் மாணவர் வாசகர் சந்திப்பு!

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்தநாளையொட்டி, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. 25.09.2025 அன்று சென்னை அண்ணா நகர் தொகுதியில், 100 (அ) -வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் செ.ஜோதி இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார். அதைத்தொடர்ந்து நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான, 'இளைய திராவிடம் எழுகிறது', 'இந்தியாவில் சமூகநீதியும் இட ஒதுக்கீடும்' போன்ற நூல்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், அண்ணா நகர் வடக்குப் பகுதி செயலாளர் பரமசிவம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.குட்டி, அண்ணா நகர் வடக்குப் பகுதி அமைப்பாளர் வி.ஆர்.சதீஷ், துணை அமைப்பாளர் வி.ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அண்ணா நகர் 100வது வட்டத்தில் மாணவர் வாசகர் சந்திப்பு!

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்தநாளையொட்டி, கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. 24.09.2025 அன்று சென்னை அண்ணா நகர் தொகுதியில், 100-வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக இளம் பேச்சாளர் ஹேமநாதன் கலந்துகொண்டு உரையாற்றினார். நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான, 'மாநில சுயாட்சி முழக்கம்' நூல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அண்ணா நகர் வடக்குப் பகுதி செயலாளர் பரமசிவம், சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா. குட்டி, அண்ணா நகர் வடக்குப் பகுதி துணை அமைப்பாளர்கள் ஸ்ரீ. முத்துக்குமார், வி.ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டனர்